

# வித்தியாசமான ஒரு பாதை

## NSW Engagement and Support Program (ESP)

Tamil

# NSW Engagement and Support Program (ESP)

*NSW பங்கேற்பு மற்றும் ஆதரவுதவித் திட்டம் (NSW Engagement and Support Program – ESP) என்பது வன்முறைத் தீவிரவாதத்திற்கான பாதையைத் தவிர்ப்பதற்கு நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ள மக்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு தன்னார்வ விடய முகாமைத்துவத் திட்டமாகும்.*

**ESP சேவையைப் பெற பொருத்தமானதாக இருக்கக் கூடிய தனிநபர்கள்:**

- வன்முறைத் தீவிரவாதத்தால் பாதிக்கப்படக் கூடியவர்கள்
- வன்முறையை ஆதரிக்கின்ற, ஊக்குவிக்கின்ற அல்லது பயன்படுத்துகின்ற நபர்கள்; அல்லது
- முன்னர் வன்முறைத் தீவிரவாதத்தில் ஈடுபட்டிருந்திருக்கக் கூடிய நபர்கள்.

**எங்கள் விடய முகாமையாளர்கள் சேவை பெறுநர்களுடன் இணைந்து செயலாற்றுபவை:**

- தனிப்பட்ட அபாயங்கள், தேவைகள், சூழ்நிலைகள் மற்றும் வலிவுகளின் அடிப்படையில் இலக்குகளைத் திட்டமிடுதல்
- கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் மனநல ஆதரவுதவி ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்படுவது உட்பட, இத்தகைய இலக்குகளை அடைவதற்கான திட்டங்கள் மற்றும் சேவைகளை அணுகுதல்
- நேர்மறையான சமூக மற்றும் சமுதாய ஆதரவுதவியுடன் தொடர்புபடுத்துதல்.

அரச மற்றும் அரசு-சாரா நிறுவனங்களால் தனிநபர்கள் இத்திட்டத்திற்குப் பரிந்துரைக்கப்படலாம். ESP -இல் பங்கேற்பது தன்னார்வ அடிப்படையிலானதாக இருப்பதுடன், இது 14 வருடங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினருக்குக்கானதாகும்.

---

தகுதியை மதிப்பிடுவதற்கு அல்லது ஏதேனும் வினாக்களைக் கேட்பதற்கு இப்போது எங்களுடன் தொடர்பு கொள்ளவும்

- **மின்னஞ்சல்:** esp@justice.nsw.gov.au
- **தொலைபேசி:** 1800 203 966
- **வலைத்தளம்:** www.dcj.nsw.gov.au/esp

---

ESP திட்டமானது வன்முறைத் தீவிரவாதத் தடுப்பு உபாயத்திலுள்ள Living Safe Together திட்டம் மற்றும் NSW அரசாங்கத்தின் ஒரு பகுதியாக அவுஸ்திரேலிய அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுகிறது. NSW ESP திட்டமானது NSW Department of Communities and Justice -இல் உள்ள Office of Safety and Cohesion எனும் பிரிவினால் வழங்கப்படுகின்றது.